3rd February 1966]

திரு. கோ. சி. மணி : சார், அந்தப் பழைய மிராஸ்தார் ஹாஸ்பிடல், இந்தப் புதிய மருத்துவமனை வந்தபிறகும் நடக்குமா, அல்லது அதைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது செயல் பட்டுவருகின்ற மருத்துவ மனையைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்க வேண்டிய அவசியமே இல்லை, அப்படி உத்தேசமும் கிடையாது. கட்டடம் பூர்த்தியான பிறகு, பழைய கட்டடத்தில் இருக்கக் கூடிய மருத்துவ வசதிகளை இந்தக் கட்டடத்திலே கொண்டு வந்து, பழைய கட்டடத்தை பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் என்று மாற்றி அமைக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தேசத்தில் இருக்கிறது.

* 76 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கல்பட்டில் திறக்கப்படவிருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு தனிப்பட்டவர் ஏதாகிலும் நன்கொடை கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆமெனில், எவ்வளவு ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 77 கேள்வி—திரு. மு. கருணாநிதி :
திரு. செ. மாதவன் :
திரு. இராம அரங்கண்ணல் : } கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவ கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேருவதற்கான விண்ணப்பத்தாள்களில், விண்ணப்பதாரர்கள் 'காங்கிரஸ் சேவாதள உறுப்பினரா' என்பன போன்ற விவரங்கள் கோரப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம்.

(இ) விண்ணப்பப் படிவங்களில் உள்ள இப்பகுதி நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. படிப்புத்தவிர ஏனைய துறைகளிலும் மனுதாரர்களின் செயல் திறன்கள் என்னவென்று அறிவதற்காகவே இப்பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : சார், எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிடி என்று சொல்லும்பேது, பல மன்றங்களில் பயிற்சி பெற்று இருக்கலாம். அப்படி இருக்க காங்கிரஸ் சேவாடால் என்று குறிப்பிட்டு இருப்பதன் காரணம் என்ன? இந்த காங்கிரஸ் சேவா டாலுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் சம்பந்தம் உண்டா?

[3rd February 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நம்முடைய நாட்டில் பல ஸேவா ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அதில் காங்கிரஸ் சேவா தாளும் ஒன்று. 1958-ல் பல ஸ்தாபனங்களைக் குறிப்பிடும் போது, இதையும் குறிப்பிட்டார்கள். இதற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பல சேவா தளங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமூக சேவா தால் என்று கேள்வியைப் போட்டால், அதில் காங்கிரஸ் சேவா தாலில் சேர்ந்தவர்களும் வருவார்கள். காங்கிரஸ் சேவா தால் என்று குறிப்பிட்டுச் சொல்வதன் காரணமாக குழப்பம் ஏற்படுகிறது. இதுவரையில் எப்படி இருந்த போதிலும், இனியாவது சமூக சேவா தால் என்று போடப்படுமா என்று அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவேயே இந்த அகடமிக் இயரிலிருந்து காங்கிரஸ் சேவா தால் என்பதை எடுக்க வேண்டும் என்ற உத்தேசம் இருக்கிறது. ஆனாலும் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன், காங்கிரஸ் கட்சிக்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது. இதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெயர் வைக்கவில்லை.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

***78 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(இ) நடப்பு ஆண்டில் எத்தனை நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) தஞ்சை மாவட்டத்தில் 17 வட்டாரங்களில் ஆரம்ப சுகாதர நிலையங்கள் உள்ளன.

(இ) நடப்பு ஆண்டில் இருபத்தோரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த எந்த வட்டாரங்களில் என்று அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கும்பகோணம், நீடாமங்கலம், மன்னார்குடி, திருவையாறு, தஞ்சாவூர், பூதலூர், அம்மாபேட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி, திருவோணம், அரந்தாங்கி; ஆவுடையார்கோவில், சேதுபாவசத்திரம், முதுக்கூர், கோட்டூர், தலநாயர், நாகப்பட்டிணம், திருவாரூர், கொரடாசேரி, திருமங்கல் அண்ட் நன்னிலம்.